

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளில் பாதாள சாக்கடை, குடிநீர், தூய்மைப் பணிகள் குறித்து தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் தினேஷ் குமார், மண்டல தலைவர் பாண்டி செல்வி, மாநகராட்சி தலைமை பொறியாளர் ரூபன் சுரேஷ் பொன்னையா, நகர் நல அலுவலர் இந்திரா, மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

# இளைஞர் எழுச்சி நாளாகக் கடைப்பிடிப்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, நவ. 21 - தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க இளைஞர் அணிச் செயலாளரும் தமிழ்நாட்டின் துணைமுதலமைச்சருமான இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடவேண்டுமென்று தூத்துக்குடி தெற்குமாவட்டச் செயலாளரும் அமைச்சருமானஅனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டு ள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளானநவம்பர் 27 அன்றுவிளிம்புநிலைமக்களுக்கும், ஆதரவற்றமக்களுக்கும், இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்தரும் விதமாக பல்வேறுநலத்திட்டங்களை வழங்கிடவேண்டும்.

இளைஞர்கள், மாணவர்கள் நலனுக்காககல்வி, வேலைவாய்ப்புபெறுவதற்காகவிளையாட்டில் பெரும் முன்னேற்றம் அடைவதற்காக அயராது உழைத்துவரும் துணைமுதலமைச்சரின் பிறந்தநாளில் இரத்ததானமுகாம்,மருத்துவமுகாம், இளைஞர்கள்,மாணவர்கள் பங்கேற்கும் உள்ளூர் அளவிலான விளையாட்டுப் போட்டிகள், அன்னதானம், ஆதரவற்றோர் இல்லங்களில் வாழ்பவர்களுக்கு உணவு மற்றும்சீருடைவழங்குதல், தூய்மைப் பணியாளர்கள், ஆட்டோஓட்டுநர்கள் போன்றோர்களுக்குசீருடைவழங்குதல் எனநலத்திட்டங்கள் வழங்கிட வேண்டும்.

கழகத்தின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகள் சார்பாக 48 இடங்களில் பல்வேறுவிதமானநலத்திட்டம் மற்றும் உணவு, சீருடைவழங்குதல் நடைபெறவுள்ளன. மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் சார்பாகதிருச்செந்தூர் அரசுமருத்துவமனையில் நவம்பர் 25, 26, 27 ஆகியதேதிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கும் குதங்கமோதிரம் மற்றும் பாதுகாப்புபெட்டகம் வழங்கவுள்ளன. அதே போல் விளையாட்டு போட்டிகளும், இரத்த தான முகாம்களுமாக 30 இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் நடைபெறுகின்றன.

அன்றையதினம் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இளைஞர் எழுச்சி நாளாககொண்டாடவுள்ள நிகழ்ச்சிகளில் அந்தந்த இடங்களில் உள்ள மாநில, மாவட்டநிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழூஉறுப்பினர்கள் ,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகநிர்வாகிகள், இளைஞர் அணிநிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள்அனைத்துஅணிகளின் மாவட்டஅமைப்பாளர்கள்,நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள்,மாணவர்கள்,கழகமுன்னணியினர் பங்கேற்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### அமைச்சர் அர. சக்கரபாணி சிறப்புரை!

# கிருஷ்ணகிரி கிழக்கு – மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன் - ஒய்.பிரகாஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, நவ.21-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களது பிறந்தநாள் அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது என கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு ஒருங்கிணைந்த மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு ஒருங்கிணைந்த மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ், யுவராஜ் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரு மான அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரு மான ஒய். பிரகாஷ் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சரு மான சின்னவர் அவர்களது பிறந்தநாளான நவம்பர் 27ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பட்டி, தொட்டி எங்கும் தி.மு.க. கொடி ஏற்றி, கேக் வெட்டி, பொதுமக்களுக்கும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இனிப்பு வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும், நவம்பர் 27 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது எனவும் ,

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான சின்னார் அவர்கள் டிசம்பர் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்து, ஆய்வு நடத்த உள்ளார்.

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு தற்போது நடந்து வரும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளை வாக்குச்சாவடி முகாம்க ளில் சிறப்பாக செய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

---

# தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி மாநில நிர்வாகிகள் - தகவல் தொழில் நுட்ப அணியின் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் தொகுதி பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாகிகள் கூட்டம் (21-11-2024 - வியாழன்) மாலை 4 மணிக்குக் கழக தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

பொருள்: 1. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்

2. கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்

3. துணை முதலமைச்சரின் பிறந்தநாள் நலத்திட்ட பணிகள்.

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 88 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை டவுணில் உள்ள வ.உ.சி மணிமண்டபத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சி.ராபர்ட் புரூஸ் எம்.பி.மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மேயர்.கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

---

### தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - அன்னதானம் வழங்கும் விழா!



## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 27.11.2024 புதன்கிழமை அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச்செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் விழா சிறப்பாக நடைபெறுகிறது . அதன் விவரம் :

| ஒன்றியம்/பகுதி/ நகரம்/ பேரூர் | இடம் | நபர்கள் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மதுரை மீனாட்சி அம்மன் கோவில் | மதுரை மீனாட்சி அம்மன் கோவில் | 1000 | மீனாட்சி அம்மன் கோவில் கிழக்கு கோபுரம் |
| | மதுரை மீனாட்சி அம்மன் கோவில் | 1000 | மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மேற்கு கோபுரம் |
| மதுரை இரயில்வே சந்திப்பு | மதுரை இரயில்வே நிலையம் அருகில் | 500 | மதுரை இரயில்வே சந்திப்பு |
| மதுரை மேற்கு வடக்கு | இரணியம், சுந்தர்ராஜன்பட்டி | 250 | பார்வையற்றோர் பள்ளி மாணவர்களுக்கு அசைவ உணவு வழங்குதல். |
| மதுரை கிழக்கு | திருமோகூர் | 50 | “செல்லமுத்து அறக்கட்டளை” போர்வை மற்றும் காலை, மதியம், இரவு அறுசுவை உணவு வழங்குதல். |
| | திருமோகூர் | 500 | காளமேகப்பெருமாள் கோவில் அன்னதானம் வழங்குதல். |
| மதுரை கிழக்கு வடக்கு | நரசிங்கம் | 500 | யோகநரசிங்கபெருமாள கோவில் அன்னதானம் வழங்குதல். |
| | யா.புதுப்பட்டி | 80 | “அரசு மறுவாழ்வு இல்லம்” அசைவ உணவு வழங்குதல் |
| | காதக்கிணறு | 60 | புதுப்பட்டி விளக்கு “ஆகாஷ் முதியோர் இல்லம்” போர்வை மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். |
| | மாத்தூர் | 105 | “மனதுருக்கத்தின் கரங்கள்” ஆதரவு இல்லம் போர்வை மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். |
| மதுரை கிழக்கு வடக்கு | பொய்கைக்கரைப்பட்டி | 30 | பழனிமுருகன் ஆசிரமம் போர்வை மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். |
| | கடச்சனேந்தல் | 80 | இமானுவேல் தொண்டு நிறுவனம், போர்வை மற்றும் இரவு உணவு வழங்குதல். |
| மதுரை கிழக்கு தெற்கு | சக்குடி முப்புளி கோவில் சக்கிமங்கலம் LKP நகர் | 700 600 | முப்புளி கோவில் மதியம் உணவு வழங்குதல் முத்துமாரியம்மன் கோவில் மதிய உணவு வழங்குதல். |
| | வரிச்சியூர் | 100 | JMS அரபிக் கல்லூரி மதிய உணவு வழங்குதல். |
| மேலூர் வடக்கு | அழகர்கோவில் | 1000 | அழகர்கோவில் அன்னதானம் வழங்குதல். |
| | அழகர்கோவில், மகாத்மா பள்ளி அருகில் | 326 | செல்லமுத்து தொண்டு நிறுவனம், அசைவ மனவளர்ச்சி குன்றியோர் இல்லம். |
| | ஆமூர், மொக்கம்பட்டி | 50 | முதியோர் காப்பகம், காலை உணவு வழங்குதல். |
| | கத்தப்பட்டி, | 50 | மனவளர்ச்சி குன்றியோர் இல்லம், மதிய அசைவ உணவு |
| மேலூர் தெற்கு | திருவாதவூர் | 87 | நியூ கிரியேசன் மறுவாழ்வு மையம், அசைவ உணவு |
| | திருவாதவூர் | 50 | சிவன்கோவில், மதிய உணவு அன்னதானம் வழங்குதல். |
| மேலூர் கிழக்கு | மேலூர், பத்திர அலுவலம் அருகில் | 250 | மேலூர் சிவன் கோவில் சைவம் அன்னதானம் வழங்குதல். |
| கொட்டாம்பட்டி மேற்கு | பொட்டப்பட்டி ஊராட்சி ரெக்கிரிப்பட்டி | 900 | வெங்கடேஷ்வரர் பெருமாள் கோவில், மதியம் உணவு வழங்குதல். |
| கொட்டாம்பட்டி தெற்கு | நான்குவழி சாலை நாவினிப்பட்டி | 500 | அருட்பெருஞ் ஜோதி மதிய உணவு வழங்குதல். |
| கொட்டாம்பட்டி கிழக்கு | திருச்சுனை | 100 | சிவன்கோவில், அன்னதானம் வழங்குதல். |
| | சொக்கலிங்கபுரம் | 250 | திரௌபதி அம்மன் கோவில் அன்னதானம் வழங்குதல் |
| வாடிப்பட்டி வடக்கு | வாடிப்பட்டி, பத்திர அலுவலகம் அருகில் | 100 | அன்னை முதியோர் இல்லம் |
| வாடிப்பட்டி தெற்கு | குருவித்துறை | 300 | வல்லப் பெருமாள் கோவில் |
| அலங்காநல்லூர் கிழக்கு, மேற்கு | எரம்பட்டி | 50 | குழந்தைகள் ஆதரவற்றோர் இல்லம் அசைவ உணவு வழங்குதல் |
| | சின்னஊர்சேரி | 50 | குழந்தைகள் ஆதரவற்றோர் இல்லம் அசைவ உணவு வழங்குதல் |
| மதுரை மேற்கு | பாசிங்காபுரம் | 60 | அன்னை இந்திரா டெமன்ஷியா முதியோர் காப்பகம் காலை, மதிய அசைவ உணவு |
| ஆனையூர் | ஆனையூர் | 60 | முதியோர் இல்லம், ஆனையூர் பேருந்து நிலையம், மதுரை. |
| திருப்பாலை | மாநகராட்சி | 50 | மதிய உணவு வழங்குதல். முதியோர் இல்லம் |
| கண்ணனேந்தல் | உத்தங்குடி | 50 | ரோஜா வனம், காலை உணவு வழங்குதல். |
| வண்டியூர் | வண்டியூர் | 100 | வீரராகவப் பெருமாள் கோவில் |
| | பாண்டிகோவில் | 200 | அருள்மிகு பாண்டி முனீஸ்வரர் திருக்கோவில் |
| | JJ நகர் | 400 | வரசித்தி விநாயகர் கோவில் |
| | பாரதிபுரம் | 40 | சரண்யா முதியோர் இல்லம் |
| | பாரதிபுரம் | 300 | அருள்மிகு கண்துவட்டி அம்மன் கோவில் |
| | சவுராஷ்ட்ராபுரம் | 400 | சக்திவேல் முருகன் கோவில் |
| | சவுராஷ்ட்ராபுரம் | 50 | தமிழ்நாடு மகா சவுராஷ்ட்ரா சபை |
| | டாக்டர் கபீர்நகர் | 500 | கபீர்நகர் |
| | கவுண்டன்கால் | 300 | காளியம்மன் கோவில் |
| | மஸ்த்தான்பட்டி | 300 | பாண்டிகோவில் அருகில் |
| மேலூர் நகரம் | சொக்கம்பட்டி விளக்கு | 150 | அருட்பெருஞ் ஜோதி அறச்சாலை, சைவம் |
| | இ.எஸ்.ஐ.சர்ச் வளாகம், சந்தைப்பேட்டை | 60 | இளாரா ஆலிங் போலியோ ஹோம், அசைவம் மதிய உணவு வழங்குதல். |
| | நகர சாலைகள் | 50 | சாலையோரம் வசிக்கும் ஆதரவற்றோர் நபர்களுக்கு, மதிய உணவு வழங்குதல். |
| மேலூர் நகரம் | மேலூர் நகரம் 27 வார்டுகளில் | 1000 | வேட்டி வழங்குதல். |
| | மேலூர் நகரம் 27 வார்டுகளில் | 1000 | சேலை வழங்குதல். |
| வாடிப்பட்டி பேரூர் | குலசேகரன் கோட்டை | 2500 | மீனாட்சி அம்மன் கோவில், அன்னதானம் |
| சோழவந்தான் | சோழவந்தான் | 200 | மாரியம்மன் கோவில், சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம். |
| அலங்காநல்லூர் | அலங்காநல்லூர் | 300 | முனியாண்டி கோவில் அசைவம் உணவு வழங்குதல். |
| பாலமேடு | பாலமேடு | 250 | சந்தைமேடு பகுதியில் அன்னதானம் வழங்குதல் |
| | மொத்தம் | 15938 | |

குறிப்பு : 28.11.2024 -ம் தேதியில் இருந்து தொடர்ந்து ஒரு மாதகாலம் அன்னதானம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் நடைபெறும்.

**பி.மூர்த்தி**
செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.